ஆகவேதான் தடுக்கச் செல்கிறவர்களையும் தாக்குகிறார்கள். உயிருக்கே அபாயம் விளைவிக்கிறார்கள். சமீபத்திலே கூட, திருநெல்வேலி மாவட்டத்திலே அம்பாசமுத்திரம் பகுதியில், தடுக்கச் சென்ற ஒரு வனவரை கத்தியால் குத்தி அவருடைய கிட்னியையே எடுக்க வேண்டிய அளவுக்கு அபாயம் ஏற்பட்டிருக்கிறது. சட்ட மன்றத்திலே, அப்படி அதிகாரிகள் முயற்சி செய்து, அவர்கள் தாக்கப்படுகின்ற சூழ்நிலைகள் வருகிறபோது இங்கே கவன ஈர்ப்பு எல்லாம் வராது. ஆகவே, அவர்களையும் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த சிறந்த அக்கறைக்கு நான் வனத் துறையின் சார்பில் நன்றி தெரிவிக்கிறேன். எந்த விதமான அபாயமும் அவருக்கு வராது. வந்தால் அரசு பாதுகாக்கும்.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் பச்சைத் தேயிலையின் விலை சரிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கே. உச்சி மற்றும் கே. கல்லன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் பச்சைத் தேயிலை விலையில் வீழ்ச்சி அடைந்திருப்பதால் அனைத்து தேயிலை விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

பச்சைத் தேயிலைக்கு தற்போதைய நிலவரப்படி கிலோ ஒன்றுக்கு ரூ. 4.89 (31—3—1986 நிலவரப்படி) சராசரி விலை வழங்கப்படுகிறது. ஒரு எக்கர் தேயிலைத் தோட்டத்திலிருந்து கிடைக்கும் சராசரி பச்சைத் தேயிலை ஆண்டொன்றுக்கு 2,000 கிலோ என வைத்துக் கொண்டால் அதைப் பராமரிக்க சராசரியாக

[திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்] [1986 மே 8

கிலோ ஒன்றுக்கு ரூ. 1.70 மட்டும் சிறு விவசாயிகள் செலவிட வேண்டும். கடந்த 5 ஆண்டுகளில் தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் மூலம் பச்சைத் தேயிலைக்கு வழங்கப்பட்ட சராசரி விலை விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

ஆண்டு	பச்சைத் தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு வழங்கப்பட்ட விலை
	ரூ.
1981-82	1.78
1982-83	2.59
1983-84	4.27
1984-85	4.89
1985-86	4.89

பச்சைத் தேயிலைக்கு 1984-85 மற்றும் 1985-86-ம் ஆண்டுகளைத் தவிர, இதர ஆண்டுகளில் வழங்கப்பட்ட விலை குறைவேயாகும். இதற்கு தேயிலை சந்தையில் ஏற்படும் விலை ஏற்றம் மற்றும் சரிவே முக்கிய காரணமாகும். தேயிலைத் தூளைப் பொறுத்த மட்டில் அதன் விலை, உலக சந்தை விலையை பொறுத்ததாகும். தேயிலைத்தூள் விலை குறையும்போது அதன் மூலப் பொருளான பச்சைத் தேயிலைக்கும் விலை குறைக்கப்படுகிறது. இதனால் பச்சைத் தேயிலையை மட்டும் நம்பி வாழும் சிறு விவசாயிகள் ஒரு நிரந்தரமான வருவாய் இன்றி அல்லல்படுகிறார்கள். இதனை மாற்றியமைக்கவும் தேயிலைத் தூளுக்கு நல்ல விலை கிடைக்கவும் அதன் மூலம் சிறு தேயிலை உற்பத்தியாளர்களின் வருமானத்தை அதிகரிக்கவும், கீழ்க்கண்டவாறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன :—

(1) தென்னிந்தியத் தேயிலைத்தூளுக்கு அதிக ஏற்றுமதி ஒதுக்கீடு வழங்கக் கோரி, ஊரகத் தொழில் அமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு நேர்முகக் கடிதம் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

(2) தேயிலை சங்கங்களின் தாய் சங்கமான 'இன்கோசர்வ்' மூலம் நேரடியாக ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது.

1986 மே 8] [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

(3) சந்தையில் நல்ல விலை கிடைக்க தேயிலை புரோக்கிங் நிறுவனம் ஒன்று நிறுவி அதன் மூலம் நமது தேயிலை மற்றும் டான் டீ தேயிலையை தனி புரோக்கர் மூலம் விற்பனை செய்ய, அரசு ஆணை எண். 338, வனம் மற்றும் மீன் துறை (வனம் 8), நாள் 4—4—1986 மூலம் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

திரு. கே. உச்சி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையின்படி பார்த்தால், இந்த விளக்கக் குறிப்பிலே நம்முடைய அமைச்சர் அவர்கள் தென்னிந்தியத் தேயிலைகளுக்கு அதிக ஏற்றுமதி ஒதுக்கீடு வேண்டும் என்று கோரி, அவர்களிடமிருந்து ஒரு நேர்முகக் கடிதம் மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், அந்தக் கடிதத்திற்குப் பிறகு, அந்நியநாட்டுச் செலாவணியை ஈர்க்க வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவுக்கு அல்லது மைய அரசின் துறைகளில், ராணுவம் போன்ற துறைகளில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு அதிக ஏற்றுமதியை செய்ய ஏதாவது மத்திய அரசிடமிருந்து உத்தரவு வந்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடிதம் எழுதியதற்கு இன்னமும் எந்தப் பதிலும் வரவில்லை. இருந்தாலும், தொடர்ந்து அவர்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டு இருக்கிறோம். தென்னிந்திய தேயிலைத் தூளுக்கு அதிக ஏற்றுமதி ஒதுக்கீடு வழங்கவேண்டும், வட மாநிலங்களிலே ஒதுக்கக்கூடிய அளவுக்கு தென் மாநிலங்களிலேயும் தேயிலைத் தூளுக்கு அதிக அளவுக்கு ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசு அதை ஏற்கும் என்று கருதுகிறோம்.

* திரு. கே. கல்லன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 மாதங்களாக, நீலகிரியில் பச்சைத் தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூபாய் இரண்டுக்கு குறைவாக வழங்கப்பட்டு, சிறு தேயிலை விவசாயிகள் பெரிதும் அல்லல்படுகிறார்கள். 1985-86-ல் ரூபாய் 4.89 கொடுக்கப்பட்டது என்று அறிக்கையில் கூறி இருப்பது அவ்வளவு சரியாக இருக்காது என்று கருதுகிறேன். இன்று இந்தியா முழுவதும் தேயிலை உபயோகம் அதிகரித்துள்ளது. ஆனால் விலை வீழ்ச்சி அடைந்திருக்கிறது என்பது அதிர்ச்சியைத் தருகிறது. உள்நாட்டில் கிலோ

ஒன்றுக்கு 35 ரூபாய்க்கு மேலாக விற்கப்படுகிறது. உதகையில் கிலோ ஒன்றுக்கு 30 ரூபாய்க்கு மேல் விற்றுக் கொண்டிருக்கிறது. தேயிலை விலை சர்வதேசச் சந்தையின் மூலம் நிர்ணயம் செய்யப்படுகிறது என்பது முழுமையாக ஒத்துக்கொள்ள முடியாத ஒன்று. எனவே, சிறு விவசாயிகளுக்கு கட்டுப்படியாகும் 'சப்போர்ட் பிரைஸ்' ரூ. 20-க்கு மேலாக நிர்ணயிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. கே. கல்லன்: உதாரணமாக கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய்க்கு மேல் நிர்ணயித்து தமிழ்நாடு முழுவதும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமாகவும், அரசுத் துறைக்குத் தேவையான தேயிலை வழங்கவும், இந்தியாவிலே உள்ள பிற மாநிலங்களில் டிப்போக்கள் ஏற்படுத்தி விற்பனை செய்யவும், இந்திய அரசு நிறுவனங்களுக்கு விற்பனை செய்யவும் பிளன்டிங் (Blending) யூனிட் ஒன்றை ஏற்படுத்தி அயல் நாடுகளுக்கு அதிக அளவில் ஏற்றுமதி செய்வதற்குத் துறை முன்வருமா என்பதையும் அறிய விரும்புவதோடு புதிதாகத் துவங்கப்படும் நிறுவனம் மூலம் Support விலையில் வாங்கவும் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தென்னிந்திய தேயிலைத் தூளுக்கு அதிக ஒதுக்கீடு வழங்கக் கோரி தொடர்ந்து நம்முடைய அரசு வற்புறுத்தி வருகிறது. அதன் மூலமாக ஏற்றுமதியின் ஒதுக்கீடு அதிகமானால் நிச்சயமாக விலை ஏறுவதற்கு வாய்ப்பிருக்கிறது. பச்சைத் தேயிலையைப் பொறுத்தவரையில் உலகத் தேயிலை சந்தையினுடைய விலையைப் பொறுத்தே அமைகிறது. உலகம் பூராவும் விலைவீழ்ச்சி ஏற்பட்டதன் காரணமாக நம்முடைய பகுதியிலே இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. பச்சைத் தேயிலையின் விற்பனை குறைந்திருக்கிறது. விலையிலும் நமக்கு மிக்க சரிவு ஏற்பட்டிருக்கிறது. அதைப் போக்குவதற்காகத்தான் தேயிலை சங்கங்களினுடைய தாய்ச் சங்கமாக இருக்கக்கூடிய 'இன்கோசர்வ்' மூலமாக நேரடியாக ஏற்றுமதி செய்ய வேண்டிய நடவடிக்கைக்கு அரசாங்கம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

1986 மே 8]   [திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்]

அதுமட்டும் அல்லாமல் இப்பொழுது சந்தையிலே நல்ல விலை கிடைப்பதற்காக ஒரு நிறுவனத்தைப் புதிதாக நிறுவி யிருக்கிறோம். இதற்கு முன்னதாக தரகர்கள் மூலமாக 4 பேர் மூலமாக இதை விற்பனை செய்து வந்தோம். ஆனால் இன்றைக்கு அதை மாற்றி இயக்குநர் மற்றும் ஆணையர், தொழில் வணிகத்துறை அவர்களைத் தலைவராகக் கொண்டு, எம்.டி., டான் டீ, எம்.டி. 'இன்கோசர்வ்', மாவட்ட ஆட்சித் தலைவர், பிலிப் ஜான் என்பது போன்று 7 பேர்களைக் கொண்ட குழுவைப் போட்டு, நாம் ஒரு நிறுவனத்தை இன்றைக்கு ஆரம்பித்திருக்கிறோம். அதன் மூலமாக நிச்சயமாக வருங் காலத்தில் நல்ல விலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. அரசினர் சட்டமுன்வடிவு.

அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்த சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.